**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

மதுரை மாவட்டம், **தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின் கீழ்** காலியாக உள்ள **அலுவலக உதவியாளர் பணியிடத்தினை** நிரப்புவதற்கான அறிவிக்கை

அறிவிப்பு எண். 1817/2026/அ1, நாள். 08.09.2026.

மதுரை மாவட்டம், ஊரக வளர்ச்சி அலகு, **அலுவலக உதவியாளர் நிலையில் காணப்படும் ஆதிதிராவிடர் (Scheduled Caste) குறைவு பணியிடத்திற்கான சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் (Special Recruitment Drive) மூலம் நிரப்பிடும் பொருட்டு தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தலைப்பின் கீழ்** காலியாக உள்ள 1 எண்ணிக்கையிலான **அலுவலக உதவியாளர்** பணியிடத்திற்கு தகுதியான நபர்களிடமிருந்து **11.09.2026 முதல் 10.10.2026 வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| **வ.எ ண்** | **பொருள்** | | **பதிவறை எழுத்தர்** |
|---|---|---|---|
| 1. | ஊதியம் | : | ரூ.15700 – 58100/– (Level -1) |
| 2. | பணி | : | **சிறப்பு ஆட்சேர்ப்பு முகாம் (Special Recruitment Drive)** |
| 3. | வயது (01.07.2026 அன்று) | : | 18 - 37 **(Scheduled Caste)** |
| 4. | 01.07.2026 அன்று அதிகபட்ச வயது வரம்பு இனம் வயது வரம்பு | : | அதிகபட்ச வயதுவரம்பு (01.07.2026) அன்று உள்ளவாறு |
| | 1)ஆதிதிராவிடர் | : | 37 வயதிற்குள் |
| | 2)முன்னாள் இராணுவத்தினர் (ஆதிதிராவிடர் ) | : | 55 வயதிற்குள் |
| | 3)மாற்றுத்திறனாளிகள் (ஆதிதிராவிடர்) | : | 47 வயதிற்குள் |
| 5. | மொத்த காலிப்பணியிடங்கள் | : | **01 (ஒன்று மட்டும்)** |
| 6. | இனசுழற்சி | : | ஆதிதிராவிடர், அருந்ததியர்–பெண் (ஆதரவற்ற விதவை) |
| 7. | கல்வித்தகுதி மற்றும் பிற தகுதிகள் | : | 8–ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் மிதிவண்டி ஓட்ட தெரிந்தவராக இருக்க வேண்டும். |
| 8. | விண்ணப்பப் படிவம் | : | இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை www.madurai.nic.in என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் (National Career Service Portal) www.ncs.gov.in ஆகியவற்றில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 9. | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | **10.10.2026 பிற்பகல் 5.45 மணிவரை தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.** |

**நிபந்தனைகள் :–**

1. தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை www.madurai.nic.in என்ற இணையதளம் அல்லது தேசிய தொழில்நெறி வழிகாட்டு மைய இணையதளம் (National Career Service Portal) www.ncs.gov.in ஆகியவற்றில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.
2. இணைதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

3. விண்ணப்பதாரர் கல்வி தகுதி குறித்த சான்று, இருப்பிட சான்று, சாதிச்சான்று மற்றும் பணி முன் அனுபவச் சான்று ஆகியவை சான்றொப்பமிடப்பட்டு கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்ட சான்றுகள் இணைக்கப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
4. இப்பணியிடம் ஆதிதிராவிடனருக்கான குறைவு பணியிடமாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஆதிதிராவிடர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
5. அஞ்சல் வில்லை ரூ. 30 ஒட்டப்பட்ட சுய முகவரியுடன் கூடிய அஞ்சல் உறை 10x4 inches postal cover) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.
6. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை 10.10.2026 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும்.
7. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது.
9. எந்த ஒரு விண்ணப்பத்தினையும் நிராகரிக்கும் அதிகாரம் நியமன அலுவலருக்கு உண்டு.
10. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் குறித்த விவரங்கள் கடிதம் (Call letter) மூலம் அனுப்பி வைக்கப்படும்.

ஆணையாளர் /
வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி),
தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம்.